(ஆ) மேலவை உறுப்பினர் ஒருவர்மீது போலீஸ் தடியடி நடத்தியதாகக் கூறப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களும், திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களும் கடலூரில் மேலவை உறுப்பினர் ஒருவரை போலீஸ் லத்தி சார்ஜ் செய்தார்கள் என்றும் அதுபற்றி விவாதிக்க இப்பேரவையின் பிற அலுவல்களை ஒற்றி வைக்க வேண்டுமென்றும் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றி ஏற்கெனவே மேலவையில் எழுப்பப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். போலீஸ் கூட்டத்தைக் கலைக்க லத்தி சார்ஜ் செய்வது போன்றவை அரசின் அன்றாட நிர்வாக நிகழ்ச்சிக்குட்பட்ட காரியமாகும். ஆகவே, இதுபற்றி விவாதிக்க இப்பேரவையின் பிற அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டிய அவசியமில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பேரவைத் தலைவர் அவர்களே, மேலவையில் நடந்ததை வைத்து, இங்கே இப்பேரவையில் எடுத்துக்கொள்ளக்கூடாது என்பது எந்த விதி முறையில் வருகிறது? மேலவையில் நடந்தவைகளை இந்த மன்றத்தில் விவாதிக்கக் கூடாது என்பதற்கு எந்த விதிமுறை இருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேலவையில் நடந்தது என்ற ஒரு காரணத்தை மட்டும் சொல்லி நான் அதற்கு அனுமதி மறுக்க வில்லை. கூட்டத்தைக் கலைப்பது போன்ற விஷயங்கள் எல்லாம் அரசின் அன்றாட நிர்வாக நிகழ்ச்சிக்குட்பட்ட காரியம். அரசின் அன்றாட நிர்வாக நிகழ்ச்சிக்குட்பட்ட காரியம் என்ற காரணத்தை காட்டித்தான் அனுமதியை நான் மறுத்திருக்கிறேன். மேலவையில் நடந்தது என்ற ஒரு காரணத்தை மட்டும் சொல்லியிருந்தால், எந்த விதியில் இடம் இருக்கிறது என்று நீங்கள் கேட்கலாம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, இது அன்றாடம் நடைபெறுகின்ற நிகழ்ச்சியா? சட்டமன்ற உறுப்பினர் அடிபடுவது எல்லாம் அன்றாட நிகழ்ச்சிக்குட்பட்ட காரியமா? நாங்கள் எல்லாம் அடிபடவா இருக்கிறோம்? இது அன்றாட நிகழ்ச்சி என்று சொல்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்ற உறுப்பினர் என்று சொல்லும்போது, சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய நேரத்திலே அந்த உறுப்பினருடைய உரிமைகளைக் காப்பது எல்லாம் பேரவைத் தலைவருக்கு உள்ள உரிமையாக இருக்கிறது. ஆனால், சட்டமன்ற உறுப்பினர் வெளியே சென்று, மக்கள் சமுதாயத்தோடு கலந்திருக்கிற நேரத்திலே அவரும் மக்களில் ஒருவர் என்றுதான் கொள்ள வேண்டும். மக்கள் கூட்டத்தில் அவருக்கென்று ஒரு தனி நிலைமையை தர முடியாது. அப்படி தனி அந்தஸ்து தரவேண்டுமென்று சட்டம் இருக்கிறதா என்றால் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று கேட்கும்போது, இந்நிகழ்ச்சி குறித்து எந்த விதத்தில் சட்டமன்ற விதிமுறைகளை மீறியிருக்கிறது? எந்த முறையில் சட்டமன்ற மரபுகள் கைவிடப்பட்டிருக்கின்றன என்பதைத்தான் சொல்ல வேண்டும். ஆகவே உறுப்பினர்கள் சட்டமன்ற விதிமுறைகளை நன்கு கடைப் பிடிக்க வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, விதி 42-ன் கீழ் ஒற்றிவைப்புத் தீர்மானம் வருகிறது. பேரவைத் தலைவர் அவர்கள் சொல்கின்ற நேரத்தில், சட்டமன்ற உறுப்பினர் பொதுமக்கள் மத்தியில் இருக்கும்போது பொதுமக்களுக்கு என்ன நடக்கிறதோ அதுவேதான் அவர்களுக்கும் நடக்கும் என்று சொல்லி ஒற்றி வைப்புத் தீர்மானத்தை மறுத்திருக்கிறார்கள். அவர் செய்த ஒரே தவறு சட்டமன்ற உறுப்பினராக இருப்பதுதான். அவர் பொது மக்களிலிருந்து பிரிக்கப்பட்டு அடிக்கப்பட்டிருக்கிறார்.

Thiru J. JAMES: Rule 50, sub-rule (8) provides that a matter to be discussed must involve more than administration of law. My adjournment motion is . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதெதற்கு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டு வரலாம் என்பதற்கு விதிமுறைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. எந்தெந்த நிகழ்ச்சியை இங்கே மேற்கொள்ள லாம் என்று சொல்கிற நேரத்தில் . . .

Thiru J. JAMES: Since it involves more than administration of law, I have given notice of the adjournment motion. You are bound to give us an opportunity . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த நிகழ்ச்சியை இங்கே மேற்கொள்ளலாம் என்று சொல்கிற நேரத்தில்,

the matter to be discussed must involve more than administration of law

என்று இருக்கிறது. இந்த விதிமுறை எங்கேயும் மாறவில்லை. எந்த நிகழ்ச்சியை ஒப்பிட்டுப் பார்ப்பது என்பதெல்லாம் பேரவை தலைவருக்குத்தான் உரிமை உண்டு.

(இ) வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள், வாழ்க்கைச் செலவுப் புள்ளி 30 ஆக உயர்ந்திருக்கிற தென்றும், இது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை யென்றும் கூறி, இப்பேரவையின் பிற அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். வாழ்க்கைச் செலவுப் புள்ளி ஒரே நேரத்தில் 30 ஆக உயர்ந்துவிடுவதில்லை. சிறுகச் சிறுகத்தான் உயரும். இதைப்பற்றியெல்லாம் நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இதற்கும் அனுமதி மறுக்கிறேன்